13-02-2022 காலை முரளி ஓம் சாந்தி "அவ்யக்த பாப்தாதா" ரிவைஸ் 10.01.1990

## தூய அன்னங்களின் சிறப்பம்சங்கள்

இன்று அனைத்துக் குழந்தைகளையும் விசேஷமானவர்களாக ஆக்கக் கூடிய பாப்தாதா ஒவ்வொரு தூய அன்னப் பறவையின் சிறப்பம்சங்களை பார்த்துக் கொண்டிருக்கின்றார். அன்னப் பறவையிடம் நிர்ணயிக்கும் சக்தி மற்றும் கண்டறியும் சக்தி விசேஷமாக இருப்பதால் கிரஹிக்கும் சக்தியும் விசேஷமாக இருக்கிறது. முத்து மற்றும் கற்கள் இரண்டையும் கண்டறிக்கின்றது, பிறகு நிர்ணயம் செய்கிறது, அதன் பிறகு முத்துக்களை மட்டும் தேர்ந்தெடுக்கின்றது, கற்களை விட்டு விடுகின்றது. ஆக கண்டறிதல், நிர்ணயம் செய்தல் மற்றும் கிரஹித்தல் அதாவது தாரணை செய்தல் - இந்த மூன்று சக்திகளின் விசேஷதாவின் காரணத்தினால் சங்கமயுக சரஸ்வதி தாயின் வாகனமாக அன்னப் பறவை காண்பித்திருக்கின்றனர். ஒரு சரஸ்வதி தாயின் நினைவுச் சின்னம் கிடையாது, தாய்க்குச் சமம் ஆகக் கூடிய ஞான வீணை உடையவர்கள் நீங்கள் அனைவரும். இந்த ஞானத்தை தாரணை செய்வதற்கும் இந்த மூன்று விசேஷதாக்கள் மிகவும் அவசியமாகும். நீங்கள் அனைவரும் பிராமண வாழ்க்கை தாரணை செய்தவுடன் ஞானத்தின் மூலம், விவேகத்தின் மூலம் கண்டறியும் சக்தியின் ஆதாரத்தில் தன்னை மற்றும் காலத்தை அறிந்து கொண்டீர்கள். தன்னுடைய பிராமண குடும்பத்தை அறிந்து கொண்டீர்கள், தனது சிரேஷ்ட கடமையை அறிந்து கொண்டீர்கள், இதற்குப் பிறகு நிர்ணயம் செய்தீர்கள், அதனால் தான் பிராமண வாழ்க்கையை தாரணை செய்திருக்கிறீர்கள். இவர் அதே கல்பத்திற்கு முந்தைய எல்லையற்ற தந்தை பரம் ஆத்மா ஆவார். நானும் கல்பத்திற்கு முந்தைய அதே சிரேஷ்ட ஆத்மா, அதிகாரி ஆத்மா என்பதை கண்டறிந்த பின்பு நிர்ணயம் செய்திருக்கிறீர்கள். தந்தையை கண்டறியாமல் நிர்ணயம் செய்ய முடியாது. சில ஆத்மாக்கள் இன்று வரை சம்பந்தம், தொடர்பில் இருக்கின்றனர். மிகவும் நன்றாக இருக்கிறது, நன்றாக இருக்கிறது என்று கூறிக் கொண்டே இருக்கின்றனர். ஆனால் பரமாத்மாவை அறிந்து கொள்ளாத, கண்டறியும் சக்தி இல்லாத காரணத்தினால் என்ன ஆக வேண்டும்? அல்லது என்ன செய்ய வேண்டும்? என்று நிர்ணயம் செய்ய முடியாமல் இருக்கின்றனர். இதனால் பிராமண வாழ்க்கை தாரணை செய்ய முடியாமல் இருக்கின்றனர். சகயோகிகளாக ஆகின்றனர், ஆனால் சகஜயோகி வாழ்க்கையை உருவாக்க முடிவது கிடையாது. ஏனெனில் இரண்டு சக்திகளும் கிடையாது. ஆகையால் தூய அன்னப் பறவையாக ஆக முடியாமல் இருக்கின்றனர். தூய்மை என்ற முத்து மற்றும் அசுத்தம் என்ற கற்கள் - இரண்டையும் பிரிக்க முடியாததால் தூய்மையை தாரணை செய்யும் சக்தியின்றி இருக்கின்றனர். ஆக அன்னப் பறவையின் விசேஷதாவில் முதல் சக்தி கண்டறிதல் அதாவது அறிந்து கொள்தல். அன்னப் பறவைகளாகிய உங்களிடம் இந்த இரண்டு சக்திகளும் இருக்கிறது அல்லவா? ஏனெனில் தந்தையை அறிந்து கொண்டீர்கள், தன்னை அறிந்து கொண்டீர்கள், சரியாக நிர்ணயமும் செய்திருப்பதால் பிராமணனாக ஆகியிருக்கிறீர்கள் மற்றும் நடந்து முன்னேறிக் கொண்டிருக்கிறீர்கள். இந்த விசயத்தில் அனைவரும் உறுதியாக தேர்ச்சி பெற்றிருக்கிறீர்கள். ஆனால் என்ன சேவை செய்கிறீர்களோ அல்லது

காரியம் செய்கிறீர்களோ, முழு நாளுக்கான அட்டவணைப்படி காரியம் செய்கிறீர்களோ, சம்பந்தம்- தொடர்பில் வருகிறீர்களோ - அந்த ஒவ்வொரு காரியத்திலும் வெற்றியாளர்களாக இருக்க வேண்டும், ஒவ்வொரு வரின் சம்பந்தத்தில் வருவதில் வெற்றியாளர்களாக இருக்க வேண்டும். ஒவ்வொரு வகையான சேவை - எண்ணம், சொல், செயல் - மூன்றிலும் சதா வெற்றியின் அனுபவம் ஏற்பட வேண்டும். அதற்கும் ஆதாரம் கண்டறியும் சக்தி மற்றும் நிர்ணயிக்கும் சக்தியாகும். இதில் முழு தேர்ச்சி அடைந்திருக்கிறீர்களா?

சேவையில் வெற்றி அல்லது சம்பந்தங்களில் வெற்றி சதா ஏற்படாததற்க்கான காரணத்தை சோதனை செய்யுங்கள் - காரியத்தை, மனிதனை, ஆத்மாவை கண்டறிவதில் வித்தியாசம் இருக்கும். எந்த ஆத்மாவிற்கு எந்த நேரத்தில் எந்த விதிப்படி சகயோகம் தேவைப்படுகிறது அல்லது போதனை தேவைப்படுகிறது, அன்பு தேவைப்படுகிறது - அந்த நேரத்தில் கண்டறியும் சக்தி தீவிரமாக இருந்தால் கண்டிப்பாக சம்பந்தங்களில் வெற்றி பலனாகக் கிடைக்கும். ஆனால் என்ன நடக்கிறது? எந்த ஆத்மாவிற்கு எந்த சகயோகம் அல்லது விதி அந்த நேரத்தில் தேவையோ அதை கொடுக்காமல் அல்லது கண்டறியாத காரணத்தினால் தன் வழிப்படி அவருக்கு சகயோகம் கொடுக்கிறீர்கள் அல்லது விதியை கடைபிடிக்கிறீர்கள். ஆகையால் திருப்தி என்ற வெற்றி கிடைப்பது கிடையாது. சரீரத்தை கண்டறியும் விதி மருத்துவருக்கு வரவில்லை எனில் என்னவாகும்? சரி ஆவதற்குப் பதிலாக ஒரு வியாதியிலிருந்து பல வியாதிகள் உருவாகி விடுகிறது. நோயாளியின் திருப்தி என்ற வெற்றி கிடைக்காது. இதை பாப்தாதா சாதாரண வார்த்தைகளில் கூறுகின்றார் - ஒவ்வொருவரின் நாடியை கண்டறியுங்கள். நடப்பது மற்றும் நடத்துவதும் அவசியமாகும். ஆக என்ன செய்ய வேண்டும்? அறிவது என்றால் கண்டறியும் சக்தியை தீவிரப்படுத்த வேண்டும். இதில் வித்தியாசம் ஏற்பட்டு விடுகிறது. இதை நீங்கள் சாதாரண வார்த்தையில் கையாளும் சக்தி என்று கூறுகிறீர்கள். இவர் கையாள்வது பழையதாக இருக்கிறது, இவர் கையாள்வது புதிதாக இருக்கிறது என்று கூறுகிறீர்கள் அல்லவா! இந்த வித்தியாசம் ஏன் ஏற்பட்டது? ஏனெனில் ஒவ்வொரு நேரத்தில், ஒவ்வொரு ஆத்மா மற்றும் ஒவ்வொரு காரியத்திற்கும் கண்டறியும் சக்தி தேவை. முழுமையாக கண்டறியும் சக்தி வந்து விட்டது, ஆனால் விஸ்தாரமாக மற்றும் எல்லையற்ற கண்டறியும் சக்தி அவசியமாகும், அந்த நேரத்தில் ஆத்மாவிடம் கிரஹிக்கும் சக்தி எவ்வளவு இருக்கிறது? எப்படிப்பட்ட வாயுமண்டலம் இருக்கிறது? மேலும் அந்த ஆத்மாவிடம் கேட்கக் கூடிய மற்றும் போதனைகளை ஏற்றும் மன நிலை எப்படி இருக்கிறது? ஒருவர் பலவீன சரீரத்துடன் இருக்கின்றார், அவருக்கு அதிக சக்திகள் நிறைந்த ஊசி (இன்ஜக்சன்) போடும் போது அவரது நிலை என்ன ஆகும்? அவர் இதயம் நின்று விடும், அமைதி நிலைக்குச் சென்று விடுவார். அதே போன்று சம்பந்தங்களில் வரக் கூடிய ஆத்மா பலவீனமாக இருக்கிறது, ஆத்மாவில் தைரியம் இல்லை. ஆனால் நீங்கள் அவருடைய மனநிலை, நேரம், வாயுமண்டலத்தை அறியாமல் அவருக்கு போதனைக்கான டோஸ் கொடுத்துக் கொண்டே சென்றால் அவரது நிலை என்ன ஆகும்? ஒன்று அவர் மனம் உடைந்து விடுவார் மற்றும் சக்தி இல்லாத காரணத்தினால் அதை அவரால் ஏற்றுக் கொள்ள முடியாது. மேலும் அதை நிரூபிக்க முயற்சி செய்வார். நீங்கள் நல்ல பாவனையுடன் செய்தீர்கள், ஆனால் வெற்றி கிடைக்காததற்குக் காரணம் கண்டறிதல் மற்றும் நிர்ணயம் செய்யும் சக்தி குறைவாக இருக்கிறது. இதனால் வெற்றி மூர்த்தி ஆவதில்

சதவிகிதம் ஏற்பட்டு விடுகிறது. எனவே முழு நாளிற்கான காரியம் மற்றும் சம்பந்தங்களில் கண்டறியும் சக்தி அவசியமாக ஆகிவிடுகிறது அல்லவா! ஆகையால் போதனைகளை நன்றாகக் கொடுங்கள், ஆனால் அனைத்து விசயங்களையும் கண்டறிந்து பிறகு அடி எடுத்து வையுங்கள். இதே போன்று சேவையின் களத்திலும் ஆத்மாக்களின் அவசியம் மற்றும் ஆசைகளை கண்டறியாமல் எவ்வளவு தான் நன்றாக ஞானம் கொடுத்தாலும், எவ்வளவு தான் உழைப்பு செய்தாலும் வெற்றி கிடைக்காது. நன்றாக இருக்கிறது, நன்றாக இருக்கிறது என்று கூறுவது ஒரு சடங்காக ஆகிவிட்டது. நீங்கள் எந்த கெட்ட விசயங்களையும் கூறுவது கிடையாது. ஆனால் வெற்றிக்கான இலட்சியத்தை அருகாமையில் அனுபவம் செய்யுங்கள். அதற்கு கண்டறியும் சக்தி மிகவும் அவசியமாகும். ஒருவர் முக்திக்கான ஆசையுடன் இருக்கின்றார் என்று வைத்துக் கொள்ளுங்கள், அவருக்கு நீங்கள் ஜீவன் முக்தி மற்றும் முக்தி - இரண்டும் கொடுத்தாலும் அவருக்கு திருப்தி ஏற்படாது. தண்ணீர் தாகத்துடன் இருப்பவருக்கு 36 வகையான உணவு கொடுத்தால் அவர் ஒரு துளி தண்ணீரால் தான் திருப்தி அடைவாரே தவிர உணவினால் அல்ல. ஆக முக்திக்கான ஆசையுடன் இருப்பவரை கண்டறிந்து அவருக்கு முக்தியைப் பற்றி தெளிவுபடுத்தினீர்கள் எனில் அவரது ஆசையும் அதிகரிக்கும் மற்றும் ஜீவன் முக்தியில் மாறியும் விடுவார். சிலருக்கு தாரணைக்கான விசயம் கேட்பதற்கு பிடிக்கும், அவருக்கு நீங்கள் கல்பத்தின் 5000 ஆண்டிற்கான அல்லது கீதையின் பகவான் யார்? - இந்த விசயத்தை கூற ஆரம்பித்தால் அவரது ஆர்வம் சமாப்தி ஆகிவிடும். ஆகையால் சேவையிலும் ஆத்மாவின் ஸ்திதி அல்லது அவரது மன நிலை எப்படி இருக்கிறது? என்பதை கண்டறிவது அவசியமாகும். ஆக சேவையில் வெற்றி எந்த சக்தியின் ஆதாரத்தில் ஏற்படுகிறது? கண்டறியும் சக்தி தேவை. அஞ்ஞானி ஆத்மாக்களின் சேவையாக இருந்தாலும், சேவைக்குத் துணையாக இருப்பவர்களின் சேவையாக இருந்தாலும் - இரண்டிலும் வெற்றிக்கு ஆதாரம் ஒன்றே ஒன்று தான். ஆக அன்னப் பறவையின் விசேஷதா - கண்டறியும் சக்தியை அதிகப்படுத்துங்கள். கண்டறியும் சக்தி யதார்த்தமாக இருக்கிறது, சிரேஷ்டமாக இருக்கிறது எனில் நிர்ணயிக்கும் சக்தியும் யதார்த்தமாக இருக்கும். மேலும் நீங்கள் யாருக்கு, என்ன கொடுக்க விரும்புகிறீர்களோ, அதை அவர் தனக்குள் கிரஹித்துக் கொள்ளும் சக்தியும் தானாகவே ஏற்பட்டு விடும். மேலும் என்ன ஆகிவிடுவார்? நம்பர்ஒன் வெற்றி மூர்த்தி. ஆக சேவையில், சம்பந்தங்களில் இலட்சியத்தை பிராப்தியாக அடைவதற்கு இந்த இலட்சணத்தை தாரணை செய்யுங்கள்.

முழு நாளும் இதை சோதனை செய்யுங்கள் - முழு நாளின் தினச்சரியத்தில் கண்டறியும் சக்தி எந்த அளவிற்கு யதார்த்தமாக இருந்தது? மேலும் எந்த அளவிற்கு திருத்தியமைக்க, சேர்க்க வேண்டிய அவசியம் இருந்தது? செய்த பிறகு தானாகவே திருத்தியமைக்கப்பட்டு விடும். ஏனெனில் தெய்வீக புத்திக்கான வரதானம் அனைவருக்கும் கிடைத்திருக்கிறது. பிரச்சனைக்களுக்கு வசமாகி, நேரம் அல்லது சூழ்நிலைகளுக்கு வசமாகி அல்லது ஏதாவது ஆத்மாவின் சகவாசத்திற்கு வசமாகி அல்லது மாயாவின் மன்மத்திற்கு வசமாகி அந்த நேரத்தில் மயக்க மடைந்து விடலாம். ஆனால் நேரம், சூழ்நிலை, சகவாசத்தின் பாதிப்பு, மன்மத்தின் பாதிப்பு குறையும் போது தெய்வீக புத்தியானது தனது வேலை செய்யும். இதையே நீங்கள் மயக்கத்திலிருந்து விழிப் படைந்து விட்டார் என்று கூறுகிறீர்கள். பிறகு இந்த திருத்தம் அல்லது

சேர்க்கை (அடிசன்) செய்ய விரும்பினேன் என்று உணர்வீர்கள். ஆனால் ரிஜிஸ்டரில் அல்லது கர்மத்தின் கணக்கு வழக்கில் கறை ஏற்படவில்லை, புள்ளி ஏற்பட்டு விடுகிறது. முற்றிலும் சுத்தமாக இருக்காது அல்லவா! அதனால் தான் கர்மத்தின் லீலை மிகவும் ஆழமானது என்று கூறப்படுகிறது.

ஆசிரியர்கள் கர்மத்தின் லீலைகளை நல்ல முறையில் அறிந்து கொண்டீர்கள் அல்லவா! ஆசிரியர்கள் முழு நாளும் எந்த பாட்டு பாடுகிறீர்கள் - ஆஹா எனது சிரேஷ்ட கர்மத்தின் லீலை. கர்மத்தின் ஆழ்ந்த கதியின் லீலை அல்ல, சிரேஷ்ட கர்மத்தின் லீலை. உலகத்தினர் ஒவ்வொரு கர்மத்தில், ஒவ்வொரு அடியில் கர்மத்தின் கணக்கை அதிகப்படுத்திக் கொண்டு ஐயோ என்னுடைய காரியம் என்று கூறுகின்றனர். நீங்கள் சிரேஷ்ட காரியம் என்று கூறுவீர்கள். இப்பொழுது இதில் மேலும் முன்னேற்றம் அடையுங்கள் - சதா சிரேஷ்ட காரியம் செய்ய வேண்டும், சாதாரண காரியம் கூடாது. கர்மத்தின் கணக்கை அதிகப்படுத்துவது நின்று விட்டது, ஆனால் சிரேஷ்ட கர்மமாக இருக்க வேண்டும் என்பதில் கவனம் செலுத்த வேண்டும். ஒருவேளை சாதாரண காரியம் மற்றும் சிரேஷ்ட காரியம் இரண்டும் கலப்படமாக இருந்தால் வெற்றியும் கலப்படம் ஆகிவிடும். இப்பொழுது சாதாரணம் என்பதை விசேஷமானதாக மாற்ற வேண்டும் என்பதில் கவனம் செலுத்த வேண்டும். ஒவ்வொருவரின் தினச்சரியத்தில் பாப்தாதா என்ன என்ன பார்த்தார்? என்பது பற்றி பிறகு கூறுகின்றேன். சாதாரணம் எவ்வளவு இருக்கிறது? விசேஷம் எவ்வளவு இருக்கிறது? என்ற ரிசல்ட் பார்த்துக் கொண்டிருக்கின்றார்.

பார்க்கக் கூடிய சாதனம் பாப்தாதாவிடம் அதிகமாக இருக்கிறது, ஒரே நேரத்தில் உள்நாடு, வெளிநாட்டில் உள்ள அனைத்துக் குழந்தைகளையும் பார்க்க முடியும். தனித்தனியாக பார்க்க வேண்டிய அவசியமில்லை. 5 நிமிடத்தில் அனைவர் பற்றியும் தெரிந்து விடுகிறது. குழந்தைகளின் ஆஹா ஆஹா என்ற பாட்டையும் பாடுகின்றார், கூடவே சமம் ஆவதற்கான இலட்சியத்தையும் சோதனை செய்கின்றார். தந்தையின் மீது அன்பு அல்லது தந்தையை அறிந்து கொள்தல் - இதில் அனைவரும் தேர்ச்சி பெற்று விட்டீர்கள். சில நேரங்களில் அதிசயமான காரியமும் செய்து கொண்டிருக்கிறீர்கள். நல்ல அதிசயங்களே இன்றி குழப்பம் ஏற்படுத்தும் அதிசயங்கள் அல்ல. சில குழந்தைகள் குழப்பம் ஏற்படுத்தும் அதிசயமும் செய்கின்றனர் அல்லவா! ஏற்படுத்துவது குழப்பம், ஆனால் இது என்னுடைய அதிசயம் என்று கூறுகின்றனர். அதனால் தான் கண்டறியும் சக்தியை அதிகப்படுத் துங்கள் என்று பாப்தாதா கூறுகின்றார். தனது கர்மங்களையும் கண்டறிய முடியும், பிறரது கர்மங்களையும் கண்டறிய முடியும். தலைகீழானதை சரியானது என்று கூறமாட்டீர்கள். இதில் கண்டறியும் சக்தியில் குறை இருக்கின்றது. ஒரு விசயத்தை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள், அனைவருக்காகவும் கூறிக் கொண்டிருக் கின்றேன் - சில நேரம் ஏதாவது வீண் காரியம் அல்லது சாதாரண காரியம் செய்கிறீர்கள். ஆனால் இது சரியா அல்லது தவறா? என்று தன்னால் அறிந்து கொள்ள முடியவில்லை, பிரச்சனைகள் வரும் போது அதற்கு வசமாகி விடுவது - அந்த நேரத்தில் அப்படிப்பட்ட பிரச்சனையின் மீது வெற்றியடைவதற்கான சிரேஷ்ட விதி என்ன? ஏனென்றால் அந்த நேரத்தில் தனது புத்தியானது வசமாகி இருக்கிறது. சரியானதைக் கூட தவறு என்று புரிந்து கொள்வீர்கள், தவறை தவறு என்று புரிந்து கொள்ளாமல் சரியானது என்று புரிந்து கொள்வீர்கள். பிறகு பிடிவாதம்

அல்லது நிரூபணம் செய்வீர்கள். இது தான் வசமான புத்தியின் அடையாளமாகும். அப்படிப்பட்ட நேரத்தில் பாப்தாதாவின் ஒரு சிரேஷ்ட வழியை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள் - யாரை பாபா நிமித்தமாக ஆக்கியிருக்கின்றாரோ, அந்த நிமித்த ஆத்மாக்கள் என்ன கட்டளையிட்டாலும் அதற்கு மகத்துவம் கொடுக்க வேண்டும். யாரோ ஒருவர் கூறியதை மனதில் வைத்துக் கொண்டு நிமித்த ஆத்மாக்கள் கூறிக் கொண்டிருக்கின்றனர் என்று அந்த நேரத்தில் நினைக்காதீர்கள். இதில் ஏமாற்றம் அடைந்து விடுகிறீர்கள். நிமித்தமாக இருக்கும் சிரேஷ்ட ஆத்மாக்களின் மூலம் என்ன போதனைகள் அல்லது கட்டளைகள் கிடைத்தாலும் அதை அந்த நேரத்தில் மகத்துவம் கொடுப்பதன் மூலம் ஒருவேளை அது கெட்ட விசயமாக இருந்தாலும் அதற்கு நீங்கள் பொறுப்பாளி கிடையாது. பிரம்மா பாபாவைப் பற்றிக் கூறும் பொழுது - ஒருவேளை பிரம்மாவின் மூலம் ஏதாவது தவறு ஏற்பட்டாலும் அந்த தவறும் மாறி உங்களுக்கு சரியானதாக ஆகிவிடும். அதே போன்று நிமித்தமாக இருக்கும் ஆத்மாக்களின் மீது ஒருபோதும் இந்த வீண் எண்ணங்களை எழுப்பக் கூடாது. அவர் ஒரு முடிவு எடுத்திருப்பார்கள், அது உங்களுக்கு சரியற்றதாக தோன்றலாம். ஆனால் அதற்கு நீங்கள் பொறுப்பாளி அல்ல. உங்களுக்கு பாவம் சேராது. உங்களது காரியம் சரியாகி விடும். ஏனெனில் தந்தை அமர்ந்திருக்கின்றார். தந்தை பாவத்தை மாற்றி விடுவார். இது ஆழமான இரகசியமாகும். குப்தமான இயந்திரமாகும். ஆகையால் நிமித்தமாக இருக்கும் சிரேஷ்ட ஆத்மாக்களின் சிரேஷ்ட கட்டளைகளை மகத்துவத்துடன் காரியத்தில் கொண்டு வர வேண்டும். இதில் உங்களுக்கு நன்மை இருக்கிறது, நஷ்டம் என்பது மாறி நன்மையானதாக ஆகிவிடும். இது தந்தையின் உத்திரவாதமாகும். புரிந்ததா? அதனால் தான் கர்மத்தின் லீலை மிகவும் விசித்தி ரமானது என்று கூறியிருக்கின்றேன். தந்தை பொறுப்பாளி ஆவார். யாரை நிமித்தமாக ஆக்கியிருக்கின்றாரோ அவருக்கும் பொறுப்பாளி தந்தை ஆவார். உங்களது பாவத்தை மாற்றக் கூடிய பொறுப்பும் இருக்கிறது. அப்படியே நிமித்தமாக ஆகிவிடவில்லை, சிந்தித்து-புரிந்து கொண்டு, நாடகத்தின் சட்டப்படி நிமித்தமாக ஆக்கியிருக்கின்றார். புரிந்ததா!

ஆசிரியர்களுக்கு நன்றாக இருக்கிறது அல்லவா! இதில் இலாபம் இருக்கிறது, சுமைகள் இலேசாகி விட்டது. ஏதாவது ஒரு விசயம் வந்தால் நிமித்தமாக இருக்கும் பெரியவர்கள் அறிவார்கள் என்று கூறுவீர்கள். இலேசாகி விட்டீர்கள் அல்லவா! ஆனால் பெயரளவிற்கு மட்டும் கூறக் கூடாது, புரிந்து கொண்டு, அன்பாக, சுவமானத் திலிருந்து கூற வேண்டும். இந்த ஆழமான விசயங்களை தந்தை அறிவார் மற்றும் புத்திசாலி குழந்தைகள் அறிவர். நிமித்தமாக இருக்கும் ஆத்மாக்களைப் பற்றி ஏதாவது கூறுவது என்பது பாபாவிற்கு கூறுவதாகும். பாபா தான் நிமித்தமாக ஆக்கியிருக்கின்றார் அல்லவா! தந்தையை விட கண்டறியும் சக்தி உங்களிடம் அதிகமாக இருக்கிறதா?

அனைத்துக் குழந்தைகளின் மீதும் பாப்தாதாவிற்கு அதிக அன்பு இருக்கிறது. நிமித்தமாக இருக்கும் ஆத்மாக்களின் மீது தான் அன்பு இருக்கிறது, மற்றவர்கள் மீது இல்லை என்று கிடையாது. அன்பின் காரணத் தினால் தான் இந்த கட்டளையை கொடுக்கின்றேன். அன்பு இல்லையெனில் எப்படி இருக்கிறீர்களோ, அப்படியே இருங்கள் என்று கூறிவிடுவேன். இந்த அளவிற்கு தைரியம் வைத்திருக்கிறீர்கள், பிராமண வாழ்க்கையில் முன்னேறிக்

கொண்டிருக்கிறீர்கள், பறந்து கொண்டிருக்கிறீர்கள் எனில் சிறிய பலவீனத்தையும் ஏன் விட்டு வைக்க வேண்டும்! இது தான் அன்பாகும். அன்பானவர்களின் குறைகளை ஒருபோதும் பார்த்துக் கொண்டு இருக்க முடியாது. இது அன்பின் அடையாளமாகும். யார் மீது உள்ளப்பூர்வமான உண்மையான அன்பு இருக் கிறதோ, அவர்களது குறைகளை எப்போதும் தனது குறைகளாக நினைப்பர். நல்லது.

எந்த ஒரு காரியம் செய்தாலும் ஒருபோதும் எந்த குழப்பமான சூழ்நிலையின் பாதிப்பில் வராதீர்கள். தன்னுடைய பிரபாவத்தை ஏற்படுத்துங்கள். அவர்கள் உங்களது பிரபாவத்தில் வந்து விடுவார்கள். மேலும் வெற்றி என்பது என்னுடைய பிறப்புரிமை என்று மனதார வெளிப்படும். தைரியத்திற்கு அதிக மகத்துவம் இருக்கிறது. ஒருபோதும் எந்த விசயத்திற்கும் பயப்படாதீர்கள். நீங்களும் ஆயிரம் கைகளுடன் இருக்கிறீர்கள். தந்தையின் ஆயிரம் கைகள் உங்களுடையதாகவும் ஆகிவிடுகிறது அல்லவா! நல்லது.

நாலாபுறங்களிலும் சதா கண்டறியும் சக்தியுடைய விசேஷ ஆத்மாக்களுக்கு, சதா ஒவ்வொரு காரியம் மற்றும் சம்பந்தத்தில் சிரேஷ்ட வெற்றியை பிராப்தியாக அடையக் கூடிய வெற்றி மூர்த்தி ஆத்மாக்களுக்கு, சதா தைரியம் மற்றும் சுபபாவனை-சுப விருப்பத்தின் மூலம் பரிவர்த்தனை செய்யும் சக்திசாலி ஆத்மாக்களுக்கு, சதா ஆஹா எனது சிரேஷ்ட காரியம் என்ற குஷியின் பாடல் பாடக் கூடிய குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்தே.

வரதானம் : அமைதி சக்தியின் மூலம், சன்ஸ்காரம் ஒத்துப்போவதன் மூலம் அனைத்துக் காரியங்களையும் வெற்றியுடையதாக ஆக்கக் கூடிய சதா தடைகளற்றவர் (நிர்விக்ன) ஆகுக.

தந்தையை பார்ப்பது, தந்தையை பின்பற்றுபவர்கள் தான் சதா தடைகளற்றவர்களாக ஆக முடியும். சகோதரிகளைப் பார்ப்பது, சகோதரர்களைப் பார்ப்பதனால் குழப்பம் ஏற்படுகிறது. ஆகையால் இப்பொழுது தந்தையை பின்பற்றி தந்தைக்குச் சமமான சன்ஸ்காரத்தை உருவாக்குங்கள். அப்போது சன்ஸ்காரங்கள் ஒத்துப்போதல் என்ற நடனம் ஆடி சதா தடைகளற்றவர்களாக இருப்பீர்கள். அமைதி சக்தியின் மூலம் அதாவது அமைதியாக இருப்பதன் மூலம் எவ்வளவு பெரிய தடையும் எளிதாக சமாப்தி ஆகிவிடும். மேலும் அனைத்து காரியமும் எளிதாக முழுமை பெற்று விடும்.

சுலோகன்: எந்த ஒரு விசயத்தையும் ஒரு காலத்தின் கண்ணோட்டத்தில் பார்க்காமல்,

ஒவ்வொரு விசயத்திலும் நன்மை இருக்கிறது என்று புரிந்திருப்பவர்கள் தான் திரிகாலதர்சிகள் ஆவர்.